# பீடைகொல்லிகளைக் குறைத்தல்.
## இது முற்றிலும் இயற்கை வழி



**இயற்கை வழியில் புல்தரை பேணல் நாள்காட்டி**

ஒவ்வோர் ஆண்டும் அதற்கே உரிய காலநிலையும் பூச்சி புழுக்களும் மற்றும் பிற தனித்துவமான பருவகால நிலைமைகளும் காணப்படுகின்றன. இந்த உண்மையை ஏற்றுக்கொண்டே உங்கள் இயற்கைப் புல்தரையையும் பூந்தோட்டத்தையும் பேணுவதில் நீங்கள் ஈடுபடவேண்டும். பருவகாலங்கள் வேறுபடுவதால் உங்கள் புல்தரையும் ஆண்டுக்கு ஆண்டு சற்று வேறுபடக்கூடும். அப்படி வேறுபடுவது முற்றிலும் இயற்கையே. காலநிலையால் அல்லது தற்காலிகமான பிற காலச் சுழற்சிகளால் வேறுபாடுகள் தோன்றுமாயின், நீங்கள் பொறுமை காப்பதே சிறந்த வழி. காலநிலை மாறுந்தோறும் ஒரு பருவகாலத்து இக்கட்டுகள் மறைவது வாடிக்கை. ஓர் ஆண்டில் தொல்லை தரும் பூச்சி புழுக்கள் மறு ஆண்டில் நன்மை தரும் பூச்சி புழுக்களுக்கு உணவாகின்றன. உங்கள் புல்தரையில் வேண்டாத களைகள் நுழையும். உங்கள் புல்லே துஞ்சும். அத்தகைய தருணங்களில் உங்கள் இயற்கை வழிகளை நீங்கள் சரிப்படுத்த நேரும். அதாவது மண்ணைக் கிண்டிக் கிளறவோ மேலதிக பசளை பரவவோ கையினால் கொஞ்சம் களை பிடுங்கவோ நேரும்.

எனினும் ஒவ்வோர் ஆண்டும் பருவகால இயல்புகளைப் பொருட்படுத்தாது முக்கிய நடைமுறைகள் சிலவற்றை நீங்கள் கடைப்பிடித்தே ஆகவேண்டும். இவை எளிய நடைமுறைகளே. இவற்றைக் கடைப்பிடிக்கும் அதேவேளை, உரிய முறையில் புல் வெட்டி, நீர் பாய்ச்சும் உத்திகளைக் கையாண்டு உங்கள் புல்தரையை நீங்கள் வளம் கொழிக்கச் செய்யலாம். நீங்கள் புரியக்கூடிய சிற்றுதவியுடனும் இயற்கை அன்னையின் உறுதுணையுடனும் உங்கள் புல்தரை பருவந் தோறும் நின்று பிடிக்கும்.

| **இளவேனில்**<br>ஏப்பிறில் பிற்கூறு முதல் மே முற்கூறு வரை | **வசந்தம்**<br>மே, யூன் | **கோடை**<br>யூலை, ஆகஸ்ட் | **இலையுதிர்**<br>ஆகஸ்ட் பிற்கூறு முதல் செப்டெம்பர் பிற்கூறு வரை | **இலையுதிர்**<br>பிற்கூறு செப்டெம்பர் பிற்கூறு முதல் நவம்பர் வரை |
|---|---|---|---|---|
| • குளிரால் தாக்குண்ட கூறுகளைச் சீரிடவும். ஈரப் புல்லில் கை வைப்பதைத் தவிர்க்கவும்.<br>• புல்தரை மீது படியும் குப்பை கூளங்களை வாரி அகற்றவும்.<br>• சேதனக் கழிவுகள் கொண்டு மண்ணைச் சீரிடவும்: மேற்பரப்பு-பசளையிடல், மேல்-விதைப்பு<br>• களைகள் தென்பட்டால் கையினால் அகற்றவும்<br>• ஆண்டு தோறும் களை முளைக்கும் பாரிய பகுதிகளைப் பொறுத்தவரை யூலை, ஆகஸ்ட் மாதங்களில் மண்ணைக் காய விடும் முறையைக் கருத்தில் கொள்ளவும்<br>• புல்-வெட்டியின் அலகைத் தீட்டவும்<br>• புல்-வெட்டி அலகை 7.5 செ.மீ. (3") மட்டத்துக்கு உயர்த்தவும் | • புல் முதல் வளர்ச்சி கண்டதும் உரம் இடவும்<br>• இயற்கை வழிக்குப் புதிய புல்தரையைக் கிளறி, மேல்-பசளை அல்லது உரம் இடவும்<br>• தேவைப்படும் வேளைகளில் களைகளைக் கண்டறிந்து கையினால் அகற்றவும்.<br>• களைகள் வேரூன்றுமுன் புல் வெட்டவும்<br>• துஞ்சல் மையங்களைப் புல் நாடாது. அங்கு பூச்சி புழுக்கள் நிலைகொள்கின்றனவா என்று கண்காணிக்கவும்<br>• பூச்சி புழுக்கள் விளைவிக்கும் சேதங்களை நிவர்த்திசெய்க. ஏற்ற தோட்டக்கலை நடைமுறைகள் பின்பற்றப்படுமாறு பார்க்கவும் | • வாடும் புல் கோடை வெயிலில் மண்ணிறமாவது இயல்பு.<br>• வரட்சிக் காலத்தில் புல் வெட்டுவதை தவிர்க்கவும்<br>• வாடும் புல்தரையில் நடந்து செல்ல வேண்டாம்<br>• கோடை வாட்டத்தை கடற்பூண்டுத் திரவம் கொண்டு போக்கவும்<br>• வரட்சி நீடித்தால் 2–3 கிழமைகளுக்கு ஒரு தடவை புல்தரைக்கு தண்ணீர் பாய்ச்சவும்<br>• களைகள் மிகுந்து கவியுங் காலத்தில் காயவிடத் தொடங்கவும்<br>• மூட்டைப் பூச்சி சேதம் விளைவிக்கும் அறிகுறிகள் தென்படுகின்றனவா என்று கவனிக்கவும். விளைந்த சேதத்தை நிவர்த்தி செய்யவும். ஏற்ற தோட்டக்கலை நடைமுறைகளை பின்பற்றுமாறு பார்க்கவும் | • தரை முழுவதும் புல் விதைக்கவும்<br>• பல்லாண்டுக் காட்டுப்புல், காம்புப்புல் விதைகளைக் கலந்து விதைத்து சேதத்தை நிவர்த்திக்கவும்<br>• இலையுதிர் காலத்தில் புல்தரை பசுமை அடையும்போது பூச்சி புழுக்கள் சேதப்படுத்தாது பார்க்கவும்<br>• மண்ணைக் கிளறி, விதைத்து, மேல்-பசளை இடவும்<br>• தோட்டக்கலை நடைமுறை கொண்டு முட்டைப்புழு விளைவித்த சேதத்தை நிவர்த்திக்க முடியாவிட்டால், உருளைப்புழு வகையின் உதவியை நாடவும்<br>• காய்ந்த பகுதிகளில் புல் விதைத்து, தண்ணீர் பாய்ச்சவும் | • இலையுதிர் காலத்தின் இறுதியில் கடைசித் தடவையாக உரமிட்டு, அடுத்துவரும் வசந்த காலத்துக்கு புல்தரையைத் தயார் செய்யவும்<br>• புல்வெட்டியைத் துப்புரவுசெய்து, குளிர் காலத்துக்கு ஏற்றவாறு பேணவும்<br>• இலைதழைகளை சிரைத்து புல்தரையில் விடவும் |

## இயற்கை வழியில் பூந்தோட்டம் பேணல் நாள்காட்டி

உங்கள் தோட்டத்தில் உள்ள பூக்கன்றுகளையும், அவற்றைப் பேணுவதற்கு வேண்டிய வழிமுறைகளையும் நீங்கள் திட்டவட்டமாகப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம். ஒவ்வொரு பூக்கன்றையும் தனிப்பட்ட முறையில் கத்தரித்து, நீர் பாய்ச்ச வேண்டும். உங்கள் பூக்கன்றுகளுக்கு வேண்டியவற்றைத் திட்டவட்டமாகப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். உங்கள் பூந்தோட்டத்தைப் பேணுவதில் நீங்கள் வெற்றியீட்டுவதற்கு அது பேருதவி புரியும். பொதுவாக எல்லாப் பூக்கன்றுகளுக்கும் நன்மை பயக்கும் நடைமுறைகள் சில உள்ளன. இயற்கை வழியில் பூந்தோட்டம் பேணுவதில் அவையும் சேரும்.

| வசந்தம் | கோடை | இலையுதிர் | குளிர் |
|---|---|---|---|
| • பல்லாண்டுப் பூக்கன்றுகளின் பட்ட கிளைகளை வெட்டிக் குறுக்கவும்<br>• றோசாக் கன்றுகளைக் கத்தரித்து, குளிரால் பட்டுப்போன கூறுகளை அகற்றி காற்றோடச் செய்யவும்<br>• பூக்கன்றுப் பாத்திகள் அனைத்திலும் புதிதாக 5 செ.மீ. (1-2 அங்குலம்) அளவுக்கு கலப்புப் பசளை இடவும்<br>• ஈரம் பாரித்த பெரிய இலைக் கும்பிகளை அகற்றி, கலப்புப் பசளை ஆக்கவும்<br>• மே மாத இறுதியில் புதிய பூக்கன்றுகளை நடவும்<br>• புதுக்க நட்ட பூக்கன்றுகளுக்கு இலைதழைக் கூளம் இடவும்<br>• வசந்த காலத்தில் பகமைப் பூக்கன்றுகள் தளிர்த்த பின்னர் கத்தரித்து உருவமும் பருமனும் பேணி ஒப்பனை செய்யவும் | • அடர்ந்து பரவும் பூக்கன்றுகளில் வாடிய பூக்களைக் கொய்யவும்<br>• விரைந்து வளரும் பூக்கன்றுகளைக் கத்தரித்து காற்றோடச் செய்யவும்<br>• களைகளைக் கண்டறிந்து, பாத்திகளிலிருந்து அகற்றி, இலைதழைக் கூளத்தை இட்டு நிரப்பவும்<br>• பீடைகளைக் கண்டறிந்து தோட்டக்கலைக் குறிப்புகளை வாசித்தறிந்து, தொல்லைதரும் பூச்சி, புழுக்களையும் நன்மை பயக்கும் பூச்சி, புழுக்களையும் இனங்காணவும் | • தமது பாத்திக்கு அப்பால் படரும் பல்லாண்டுப் பூக்கன்றுகளைப் பிரித்துக் கூறாக்கவும்<br>• பாத்திகளில் இலைதழைக் கூளம் இடவும்<br>• றோசாக் கன்றுகளின் உயரத்தை அரைவாசியாக வெட்டிக் குறுக்கவும்<br>• செழிக்காத பூக்கன்றுகளை அகற்றி, எதிர்காலத் திட்டத்தை நாளேட்டில் குறித்து வைக்கவும்<br>• இலைகளைத் தோட்டத்தில் விட்டு வைக்கவும். குளிர் காலத்தில் அவை கூளமாகும். அல்லது அவற்றைக் கலப்புப் பசளை ஆக்கியில் இடவும். வசந்த காலத்தில் அவை புதிய கலப்புப் பசளையாகும் | • செடிகளும் சிறிய மரங்களும் இலகுவில் புலப்படும் வண்ணம் கிளைவிடும் பொழுது அவற்றைக் கத்தரிக்கவும்<br>• வசந்த காலத்தில் நாட்ட வேண்டிய பூக்கன்றுகளைக் குறித்து வைக்கவும் |

## இயற்கை வழியில் மரம் பேணல் நாள்காட்டி

பூக்கன்றுகளுக்கும் பூச்செடிகளுக்குமான நாள்காட்டியைப் போலவே மரங்களுக்கான நாள்காட்டியும் பெரிதும் மரங்களின் இனத்தையும் தனிப்பட்ட பருவகால நிலையையும் பொறுத்தது. சில வேளைகளில் சான்றிதழ் பெற்ற மரவியலர் ஒருவரை அழைத்து பழுதுபட்ட மரத்தின் நிலைவரத்தை திட்டவட்டமாகக் கண்டறிந்து, அதனைப் பேணுவதற்கு அவர் விதந்துரைக்கும் வழிமுறைகளைக் கண்டறிய நேரும். எனினும் பருவம் முழுவதும் அத்தகைய மரத்தை உற்று நோக்கி, அதனைத் தகுந்த தோட்டக்கலை நடைமுறைகளின்படி பேணுமாறு பார்ப்பதற்குச் சிறந்த வாய்ப்பு உங்களுக்கே உண்டு.

| வசந்தம் | கோடை | இலையுதிர் | குளிர் |
|---|---|---|---|
| • பீடைகள் பீடிக்கின்றனவா என்று அவதானிக்கவும் - பூச்சி, புழுக்கள் பெரிதும் நடமாடும் காலம் இதுவே<br>• அந்துப்பூச்சி முட்டைப்புழுக் கூடுகளை அகற்றவும்<br>• பெரிய மரங்களைக் கத்தரித்து, பட்ட அல்லது சேதப்பட்ட கிளைகளை அகற்றி உங்கள் புல்தரையில் மேலும் வெயில் பட விட வேண்டுமா என்று ஒரு மரவியலரிடம் கேட்டறியவும் | • வரட்சிக் காலத்தில் மரங்களுக்கு, குறிப்பாக இள மரங்களுக்குத் தகுந்த முறையில் தண்ணீர் பாய்ச்சவும்<br>• கோடையில் இடம்பெறும் கட்டுமானம், புல்தரை உபகரண வகைகள் மரக் கொப்புகளை அல்லது வேர்களைத் தாக்காவாறு பாதுகாக்கவும் | • இலையுதிர்கால முட்டைப் புழு போன்ற பீடைகள் பீடித்துள்ளனவா என்று உற்று நோக்கவும்<br>• உதிரும் இலைகள் மரத்தடியில் குவிந்து வேர்களைப் பாதுகாக்க விடவும் | • வாகனப் பாதை முகப்பிலிருந்து உப்புடன் கூடிய பனித்திரளைக் கோலி மரவேரடியில் குவிப்பதைத் தவிர்க்கவும்<br>• புதுக்க நாட்டிய 3 மீட்டர் உயரத்துக்கு மேற்பட்ட மரங்களுக்கு கொழுகொம்பு கொடுக்கலாம். கிட்டத்தட்ட ஓராண்டில் அவை வேரூன்றிய பின்னர் கொழுகொம்பை அகற்றவும். |